# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8093700

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு நாகப்பட்டினம் Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 5/2021 Date நாள் 26.02.2021

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 25.02.2021 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு 19.00 hours Time from : நேரம் முதல் – Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.02.2021 Time : நேரம் 09.00 hours
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.02.2021 Time : நேரம் 11.00 hours

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 70 KM வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கொண்டல் DPC (TNCSC) மயிலாடுதுறை மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. R. துரைக்கண்ணு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. ஜெகந்நாதன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 34/2021 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் / [illegible] (g) Address : முகவரி நாட்டுத்தெரு, கீழ தென்பாதி, வள்ளுவக்குடி அஞ்சல், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   மயிலாடுதுறை மாவட்டம் கொண்டல் DPC-யின் BC. சி.இ. இளங்கோவன்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — [illegible] தாமதம் —

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — இல்லை —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 26.02.2021 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் அலுவலகத்திலிருந்த போது திரு.R.துரைக்கண்ணு, வயது.32/2021, த/பெ. M.ரகோத்தமன், காட்டுத்தெரு, கீழதேனூர், வள்ளுவக்குடி அஞ்சல், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் பின்வருமாறு:- தேதி : 26.2.2021 அனுப்புதல் R.துரைக்கண்ணு, த/பெ.M.ரகோத்தமன், காட்டுத்தெரு, கீழதேனூர், வள்ளுவக்குடி அஞ்சல், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம். பெறுதல் உயர்திரு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், நாகப்பட்டினம். ஐயா, நான் சீர்காழி தாலுக்கா கீழதேனூர் காட்டுத்தெருவில் என் குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் 10 வது வரை படித்துள்ளேன். நான் விவசாயம் மற்றும் கம்பி பிட்டர் வேலை செய்து வருகிறேன். எனக்கு 5 அக்கா மற்றும் ஒரு தம்பி உள்ளனர். அப்பா இறந்துவிட்டார். எங்களுக்கு சீர்காழி சட்டநாதசுவாமி கோயில் நிலம் சுமார் 7 ஏக்கர் நிலம் கீழதேனூர் கிராமத்தில் உள்ளது. அந்த நிலத்தை சுமார் 10 ஆண்டுகளாக நாங்கள் சாகுபடி செய்துவருகிறோம். நாங்கள் சாகுபடி செய்து அறுவடை செய்யும் நெல்லை கொண்டல் DPC-யில் தான் போடுவோம். கடந்த 9.02.2021-ந் தேதி இந்த முறை சாகுபடி செய்து அறுவடை செய்த சுமார் 200 நெல் மூட்டைகளை கொண்டல் DPC-யில் போடுவதற்காக கொண்டுவந்து

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26.2.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

R. DURAIKANNU

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 26.2.2021

26.02.2021

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: நிலை Inspector of police No. எண்
Vigilance & Anti-Corruption
Nagapattinam.

* GCP-240-34(Type 2) 90,000 Cps -21 3 ... HCL-12)p 2

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-**

அடுக்கிவிட்டு, கொண்டல் DPC-யின் BC இளங்கோவன் அவர்களிடம் நெல் மூட்டைகளை எடுக்குமாறு சொன்னேன். அதற்கு BC இளங்கோவன் உனக்கு முன்னாள் நெல் மூட்டைகளை கொண்டுவந்தவர்கள் இருக்கிறார்கள் அதனால் உன்னுடைய நெல்மூட்டைகளை எடுக்க இன்னும் நான்கைந்து நாட்கள் ஆகும் என்று சொல்லிவிட்டார். அதன்பின்னர் நான் தினமும் கொண்டல் DPC-க்கு சென்று எனது நெல்மூட்டைகளை பார்த்து வருவேன். நான் நேற்று 25.02.2021-ந் தேதி காலை கொண்டல் DPC-க்கு சென்று BC இளங்கோவன் அவர்களிடம் நெல்மூட்டைகளை எடுப்பது தொடர்பாக கேட்டதற்கு அவர் மதியம் எடுத்துவிடலாம் என்று சொன்னார். அதன்படி 25.02.2021-ந் தேதி மாலை சுமார் 4 மணிக்குமேல் BC இளங்கோவன் அவர்கள் என்னுடைய 172 நெல் மூட்டைகளை மட்டும் தூற்றி அளந்து எடுத்தார்கள். நான் 25.02.2021-ந் தேதி இரவு சுமார் 7 மணிக்கு BC இளங்கோவன் அவர்களிடம் என்னுடைய நெல் மூட்டைகளை போட்டதற்கு ரசீது கேட்டதற்கு, BC இளங்கோவன் அவர்கள் என்னிடம் 172 நெல் மூட்டைகளுக்கு மூட்டை ஒன்றுக்கு 40 ரூபாய் வீதம் மொத்தம் 6,880/- வருகிறது, அதனால் ரவுண்டாக 7,000/- ரூபாய் கொடு என்று கேட்டார். நான் பணம் எதற்கு தரவேண்டும், நாங்கள் கஷ்டப்பட்டு நெல் அறுவடை செய்து போட்டதற்கு எதற்கு பணம் தரவேண்டும் என்று கேட்டதற்கு, BC இளங்கோவன் என்னிடம், மூட்டைக்கு 40 ரூபாய் வாங்குவது உனக்கு தெரியாதா, லோடுமேன்கள் மற்றும் லாரிக்கு பணம் கொடுக்கவேண்டியுள்ளது, அதனால் 172 மூட்டைகளுக்கு 7,000/- ரூபாய் நீ கொடுத்தால்தான் நான் உனக்கு பில் தருவேன் என்று கண்டிப்பாக சொன்னார். நான் தற்போது பணம் இல்லை என்று சொன்னதற்கு நாளைக்கு பணத்தை கொண்டுவந்து கொடுத்துவிட்டு ரசீதை வாங்கிச்செல் என்று சொல்லிவிட்டார். நான் வேறுவழியில்லாமல் சரி தருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். கொண்டல் DPC-யின் BC திரு.இளங்கோவன் அவர்கள் என்னுடைய நெல் மூட்டைகளை எடுத்ததற்கு ரசீது கொடுக்க கொடுக்க லஞ்சமாக கேட்ட ரூபாய் 7,000/-த்தை இளங்கோவன் அவர்களிடம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் என்னிடம் லஞ்சம் கேட்ட இளங்கோவன் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க நாகப்பட்டினம் லஞ்ச ஒழிப்புதுறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து, இளங்கோவன் லஞ்சமாக கேட்ட ரூபாய் 7,000/- த்தை எடுத்துக்கொண்டு வந்து இன்று 26.2.2021-ந் தேதி இந்தப் புகாரை கொடுக்கிறேன். என்னுடைய நெல் மூட்டைகளை எடுத்ததற்கு ரசீது கொடுக்க ரூபாய் 7000/- லஞ்சம் கேட்ட கொண்டல் DPC-யின் BC திரு.இளங்கோவன் அவர்களின் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஆங்கிலத்தில் ஒப்பம்) R.Duraikkannu, 26.2.2021 **SUBMITTED** Sir, Received this computer typed written complaint from the complainant on 26.02.2021 at 09.00 hours, verified and ascertained its genuineness through sources, and

registered a case on the complaint on 26.02.2021 at 11.00 hours in Nagapattinam Vigilance & Anti-Corruption Detachment **Crime No.5/2021**, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018.

26.02.2021
**(G.RAMESH KUMAR)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.

I am submitting the Original F.I.R, along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Nagapattinam and the copies of the F.I.R. to all other concerned Officials.

26.02.2021
**(G.RAMESH KUMAR)**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Nagapattinam.